அண்ணாவும் தலைவர் மு.க.ஸ்டாலினும்!

பேரறிஞர் அண்ணா தமிழ் நாட்டின் முதலமைச்சராக. வீற்றிருந்த பொற்காலம். அந்த நேரத்தில் பள்ளி மாணவனாக இருந்த நான் இளமைப் பருவத்தில் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க. என்ற அமைப்பைத் தொடங்கி, நடத்தி வந்தேன். அன்றைய காலத்தில் இளைஞர் அணி என்ற இப்போதைய அமைப்பு உருவாக்கப்படவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 60 வயதை அடைந்து மணிவிழா கொண்டாடுகின்ற காலம் அது. இளைஞர் தி.மு.க.வின் சார்பில் அண்ணாவை அழைத்து மணி விழாக் கொண்டாடிட திட்டமிட்டு, அண்ணா அவர்களை சந்திக்க, நுங்கம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்திற்குச் சென்றேன். அந்த நேரம் அங்கே குழுமியிருந்த என்.வி.என். நாடாளுமன்ற உறுப்பினர் க.ராஜாராம் மற்றும் சிலர் என்னிடத்தில் என்ன விவரம் என விசாரித்துவிட்டு அண்ணாவுக்கு உடல்நலமில்லை. சந்திக்க இயலாது எனக் கூறி, என்னைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

சுருங்கிய முகத்தோடு வீடு வந்து சேர்ந்தேன். நான் வந்து சென்ற செய்தி அண்ணா

முதல்வர் மு.க.ஸ்டாலின்

அவர்களுக்குத் தெரிந்தவுடன். என்னை அழைத்து வரச்சொல்லி அவரது காரையே கோபால புரத்திற்கு அனுப்பி வைத்தார்.

அண்ணா என்னை அழைத்தார் என்ற செய்தி கேட்டு அவரது பரந்து விரிந்த விசாலமான இதயத்தில் இந்தச் சிறுவனுக்கும் ஓர் இடம் இருக்கிறதே என எண்ணி மகிழ்ச்சியில் திளைத்தேன். அந்தக் காரில் நான் அண்ணாவின் வீடு சென்று அவரைச் சந்தித்தபோது. ஏன்? வந்து விட்டு பார்க்காமல் சென்றுவிட்டாய்? எனக்கேட்டார். தாங்கள் உடல் நலமில்லாதால் பார்க்க முடியாது எனச் சொல்லிவிட்டனர். சென்றுவிட்டேன் என்றேன்.

அவர்கள் சொன்னால் நீ சென்று விடுவதா? எனக்கேட்டு மேலும், வந்த விசயம் என்ன? எனக்கேட்டார். கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. சார்பில் தங்களுக்கு மணிவிழாக் கொண்டாட வேண்டும். அதற்குத் தாங்கள் நாள் ஒதுக்கித் தரவேண்டும். அதற்காகத்தான் வந்தேன் என்றேன். சரி. தேதி பின்னர் தருகிறேன். போய் விட்டுப் பிறகு வா என்றார். இல்லை. இல்லை. இப்போதே தேதி கொடுங்கள். மணிவிழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டும். என்றேன். என்ன? உன் அப்பனைப் போலவே பிடிவாதமாக இருக்கிறாய் என அன்போடு கேட்டு விட்டு தேதியும் ஒதுக்கித் தந்தார்.

இந்த விழாவில் பங்கேற்று அண்ணாவுக்கு பொன்னாடை போர்த்த வேண்டுமென சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களையும் அழைத்தேன். ஒப்புதல் அளித்தார்கள். விழா ஏற்பாடுகளை இளைஞர் தி.மு.க. சார்பில் தீவிரமாகவும். ஆர்வமாகவும் செய்து கொண்டிருந்தோம்.

நான் சந்தித்து வந்த சில நாட்களுக்குப் பிறகு அண்ணா நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று விட்டதால் அந்த விழா நடத்த இயலாமலே போய்விட்டது. என் ஆசை நிராசையாகிவிட்டது.

அந்த விழா நடத்த இயலாமல் போய்விட்டதே என்ற ஏக்கமும் வருத்தமும் இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை எனினும் ஓராண்டு முழுவதும் அண்ணாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிட நெல்லையில் நடைபெற்ற இளைஞர் அணி மாநாட்டில், ஆலோசனையை முன்மொழிகின்ற வாய்ப்பைப் பெற்றேன் என்பதை எண்ணிப் பூரிப்பும். பெருமையும் அடைகின்றேன்.

அறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு மலர்

கட்சி-இலட்சியம்-கடமையுணர்வு!



இலட்சியத்துக்காகவும், அந்த இலட்சியத்தை அடைய உதவும் கருவி போன்ற கட்சிக்காகவும், சொந்த நலனையும், உயர் பதவியையும் வெறுத்து ஒதுக்கும் வீரமும், கஷ்ட நஷ்டம் ஏற்கும் சகிப்புத் தன்மையும் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால், அவரைத் தலைவராகக் கொண்ட கட்சியும், அதனைச் சார்ந்துள்ள மக்களும் முன்னேற்றம் அடைய முடியும் என்பது திண்ணம்.

அரண்மனை மாடியிலே அம்ச தூளிகா மஞ்சத்திலே அமர்ந்துள்ள அரிவையை அடைய வேண்டி, ஆங்குச் சென்ற ஆணழகன், அகழியின் ஆழத்துக்கோ அதிலே அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சினால், எங்ஙனம் மங்கையைப் பெற முடியும் ?

இலட்சியமெனும் எழிலுடையாளைப் பெற்று இன்புற எண்ணுவோரிற் பலர், அகழிக்கு அஞ்சி, புறத்தே நின்று புகைபடு மனத்துடன் போரிட்டுக் கொண்டோ, புலம்பியோ கிடப்பர். ஒரு சிலருக்கே உழவுக்கேற்ற விளைவு எனும் மொழிவழி நடக்கும் அறிவாற்றலுண்டு. அவர்தமைச் சலிப்பு அண்டாது. சாகசத்துக்கு அவர் பலியாகார். போலியைக் கண்டு ஏமாறார். புல்லரின் புன்மொழி கேட்டுப் புழுங்கார். தாக்கிய வேலினைத் தூக்கி எறிந்துவிட்டு, போருக்குப் புகின் யாருக்கும் இது நேரல் முறையே என்பது தெரிந்து, புலியுடன் போரிடுகையிலே கிலி எனும் வலி கொளல் கூடாது என்பதறிந்து, உயிர் கெடும்வரை, நெடுவரை போல் நின்று போரிடுவர் வீரர். கட்சிப் பணியும் அத்தகைய களத்துப் பணி போன்றதே!

- பேரறிஞர் அண்ணா

இருட்டை விலக்கிய சூரியன் நீ!



விடிகாலை பொழுதினிடை துருவம் காட்டி
விடிவெள்ளி போலிங்கு முளைத்த
கோவே!
முடியவிழும் மலருக்குள் புதுமை வீசும்
மணம்போன்றே உதித்தபெரும்
எங்கள் அண்ணா!
வடிவழகு வார்த்தைக்கு! வாய்த்த சிற்பி
வளங்கொழிக்கும் சொல்லேறாம்
அறிஞ! சிந்தைக்
கடிவாளம் போட்டாற்போல் மக்கள் சூழக்
கனிவான மந்திரங்கள் தந்தாய்
அண்ணா!

மக்களுக்குத் தொண்டாற்ற கோட்டை சென்று
மதிப்புமிகு நற்செயல்கள் மேன்மை செய்தாய்!
சிக்கலுண்டுக் கிடந்திட்ட தமிழ கத்தைச்
சீர்திருத்தி, எழுதுகோலால் மாற்றம் கண்டாய்!
பக்கத்தில் உடன்பிறப்பை உழைக்க வைத்தாய்!
பணிசிறக்க அறவழியில் கொள்கை கொண்டாய்!
திக்கற்ற தமிழகத்தை வழிந டத்த
தக்கதொரு தம்பியாக ஸ்டாலின் தந்தாய்!

பேசுகின்ற தமிழ்மொழிவாய் மணக்கும்! இன்பப்
போதைதரும் சொல்லில்தேன் கிடைக்கும்! தென்றல்
வீசுகின்ற மென்மையினாய்ப் பதமி ருக்கும்!
வீழ்ந்திட்ட ஏழையர்தம் உளம்ப டிந்த
தூசி கொண்ட பழைமைகளைப் போக்கி நிற்கும்!
துயரங்கள் களைவதற்கோ மனமி ருக்கும்!
வாசிக்கும் தமிழரெல்லாம் வசிக ரிக்கும்
வசந்தம்நீ! இலக்கியமே எங்கள் அண்ணா!

இருட்டுக்கு வெளிச்சம்நீ! இயக்கங் கண்ட
இலட்சியம்நேர் கழகத்தின் தந்தை யும்நீ!
மிரட்டுகின்ற பகைவர்க்கும் கனிவுச் சொல்லின்
மாத்திரைநீ! அறிவொளிக்கு ஞான மும்நீ!
கருத்துக்கும் கவிதைக்கும் ஏற்றம் தந்த
கலைச்சொற்கள் நாயகன்நீ! எங்கும் தேடித்
திரட்டியநன் னூல்கள்சேர் பெட்ட கம்நீ!
தீந்தமிழாற் சாறெடுத்த இனிப்பும் நீயே!

சுடரொளிநீ! மறைந்தாலும், எங்கும் எம்மைச்
சுமைதூக்கிக் கழகத்தைக் கட்டிக் காக்கத்
தடந்தோளார் கலைஞர்போல் ஸ்டாலின் தந்தாய்!
தடம்மாறா உன்பாதை நடந்து செல்லும்
அடலேறாம் படைகொண்ட வல்ல தம்பி
ஆற்றலாளர் அருந்தொண்டர் ஸ்டாலின் உண்மை!
மடல்திறந்த மலரைப்போல் உள்ளங் கொண்ட
மாமேதை தளபதிக்கோ தம்பி நாங்கள்!

வெண்தாடிப் பெரியாரைக் துணைமேற் கொண்ட
வெண்கொற்றக் குடைகாக்க ஸ்டாலின் நின்றார்!
மண்காக்கும் செங்கோலைத் தூய்மை செய்தார்!
மணிமுடியை மக்களுக்குச் சிறப்பு செய்தார்!
கண்மணியாம் கழகத்துத் தொண்டர் கூட்டம்
களமிறக்கித் தென்னாட்டில் வெற்றி கண்டார்!
கண்ணியமும் கடமையும்நற் கட்டுப் பாடும்
தந்துசென்ற அண்ணனை வணங்கு கின்றோம்!

கவிஞர் தமிழ்தாசன்
- கழகத் தீர்மானக்குழு தலைவர்

பதுக்கல்காரர்கள் ஏற்றிச் செல்லுவது அரிசியா? இதயமா?

"பதுக்கல் சமூக விரோத காரியம். பதுக்குகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைவிட சமூகத்திற்கு ஆபத்தானவர்கள்; கேட்டை உண்டாக்கக் கூடியவர்கள் வேறு யாருமே இருக்க முடியாது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு லாரியில் பதுக்கல் நெல் மூட்டைகள்; அரிசி மூட்டைகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்றால்; ஏற்றிச் செல்லப்படுவது, அரிசி மூட்டைகள் மட்டுமல்ல; ஆயிரக் கணக்கான உயிர்கள் அதிலே ஏற்றிச் செல்லப்படுகின்றன; இலட்சக் கணக்கான பொது மக்களைப் பட்டினி போடுவதற்கான சதித் திட்டங்கள் அதிலே ஏற்றிச் செல்லப்படுகின்றன!"

சட்டமன்ற பேரவையில்
27.3.1967.

அண்ணா சொன்னார்!

"மாற்றான் தோட்டத் து மல்லிகை என்பதால் மணக்காது என எண்ணுபவனல்ல நான்", என்றும், தான் பெற்றெடுத்த குழந்தையை முத்தமிடவோ சீராட்டவோ, பாராட்டவோ எனக்குத்தான் உரிமை உண்டு; மற்றவர்களுக்கு இல்லை என்று ஒரு தாய் சொல்லுவாளானால் அந்தக் குழந்தை நோஞ்சானாகத்தான் போகுமே தவிர, சிறப்பாக இராது. அதை உணர்த்தும் வகையில்தான் வள்ளுவர் தன் குறளில் எடுத்துக் கூறியுள்ளார்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்
மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

- குறள்

புதிய சமுதாயம் என்று பிறக்கும்?



தாளமுத்து நடராசனைத் தந்தோம். பிணமாகத் தந்தார்கள்; சாதாரணப் போர் என்று சொல்லிவிட முடியுமா? என் கண்ணாலே பார்த்தேன்.

கும்பகோணத்தில் 144 தடை உத்தரவை மீற நான் சர்வாதிகாரியாகத் தேவைப்பட்ட காலம். கையிலே கொடி ஏந்தி, தடை உத்தரவு ஒழிக என்று ஒலித்துச் சொல்வார்கள்; போலீஸ் வேனிலே வந்து இறங்குவார்கள். வீதி வழியே இப்படிப் போகக் கூடாது என்பார்கள்; நண்பர்கள் போய்க் கொண்டே இருப்பார்கள். உடனே தடி பேசும். தோழர்கள் கீழே விழுந்தார்களே தவிர, திரும்பி ஓடியதில்லை. இரத்த ஆற்றிலே நீந்தினார்கள். கடைசியிலே அடித்தடித்து போலீஸார் ஓய்ந்தனரே தவிர, படை வீரர்கள் ஓடவில்லை.

ஒருநாள், நண்பர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆதித்தன் என்னிடம் வந்தார்.

"என்ன அண்ணாதுரை உன் தொண்டர்களை அடிக்க வேண்டுமென்றால், நாங்கள் கண்களையல்லவா மூடிக்கொண்டு அடிக்க வேண்டியிருக்கிறது? மண்டை பிளந்து ரத்தம் ஓடினாலும் தாளமுத்து நடராசா என்றுதானே கீழே வீழ்கிறார்கள்! நான் இருக்கிற ஊரிலே இந்தப் போராட்டத்தை ஏன்ய்யா வைத்துக்கொண்டாய்?" என்று கேட்டார்.

கண்களிலிருந்து கீழே விழக் காத்திருக்கும் கண்ணீருடன் கேட்ட அவருக்கு நான் சொன்னேன். "உங்கள் கடமை அடிக்கிறீர்கள். எங்கள் தொண்டரின் மண்டையிலிருந்து வரும் செந்நீரும் சட்டத்துக்குப் பயந்து, பாதுகாவலராக இருக்கும் உங்கள் கண்களிலே பொங்கிய கண்ணீரும் சேர்ந்தால் அப்படி என்று சேர்கிறதோ - அன்றுதான் ஒரு புதிய சமுதாயம் பிறக்கும்!"

சென்னையில் 11, 12.7.1953ல் நடைபெற்ற
சென்னை மாவட்ட தி.மு.க. மாநாட்டில்...

- பேரறிஞர் அண்ணா